விளம்பர கட்டணம்
முழுபக்கம் - 4000
அரைபக்கம் - 2000
கால்பக்கம் - 1000
விளம்பர தொடர்புக்கு:
9443063962

# ஆதித்தமிழன் அறிவாயுதம்

நிறுவனர் இரா.அதியமான்

AATHITHAMIZHAN ARIVAAYUTHAM

வளைதளம் : www.aathithamizharperavai.com

ஒடுக்கப்பட்ட மக்களுக்காக போராடும் இதழ்

| தனிச்சுற்றுக்கு மட்டும் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | ஐப்பசி அக்டோபர் 2012 | இதழ் - 23 | பக்கம் 8 | நன்கொடை ரூ.10 |
|---|---|---|---|---|---|

## நாமக்கல் விவேகானந்தா கல்லூரி மாணவி காயத்ரி கொலை:



# நீதிகேட்டு போராடிய நாகராசன்-தமிழரசன் மீது குண்டர் பாய்ந்தது

- காவல்துறையின் அராஜகபோக்குக்கு அதியமான்-திருமாவளவன் கடும் கண்டனம்
- இந்த வழக்கை சி.பி.சி.ஐ.டிக்கு மாற்றவேண்டும்
- தோழர்களை உடனே விடுதலைசெய்யவேண்டும்



மகளை பறிகொடுத்த தாய் கதறி அழுது மயங்கி விழுந்த காட்சி.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு விவேகானந்தா தொழில் நுட்பக்கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பி.டெக் படித்து வந்த அருந்ததியர் மாணவி காயத்ரி மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார். மாணவிதற்கொலை செய்யவில்லை. கற்பழித்து கொலை செய்யப்பட்டுள்ளார் என பெற்றோர் இந்த வழக்கை சி.பி.சி.ஐ.டிக்கு மாற்ற வேண்டும் என தெரிவித்ததின் பேரில் ஆதித்தமிழர் பேரவை ஆட்சியர் அலுவலகம் முன்பு திரண்டனர்.

தொடர் முழக்க போராட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதற்கு எவ்வித காரணமும் தெரிவிக்கப்படாதா நிலையில் போரரராட்டத்திற்கு வந்த மக்கள் மீது எவ்வித காரணமுமின்றி போலீஸ் தடியடி நடத்தியதில் பெண்கள் உள்பட 10 பேர் படுகாயமடைந்தனர். இதில் அதியமான் -நாகராசன்- தமிழரசன் மற்றும் பேரவை தோழர்கள் உள்பட 330 பேர் கைது செய்யப்பட்டனர்.

**நடந்தது என்ன? காயத்ரியின் பெற்றோர் கண்ணீர்மல்க கூறியது:-**

கடந்த மாதம் 30.08.12 அன்று வியாழக்கிழமை கல்லூரிக்கு ஓணம் பண்டிகை விடுமுறை விட்டுள்ளனர். விடுதியில் காயத்திரியின் அறையில் காயத்ரியோடு சேர்ந்து 8 பேர் தங்கியிருந்துள்ளனர். வீட்டுக்கு கிளம்பிய 8 மாணவிகளில் காயத்திரியை மட்டும் மருத்துவமுகாம் இருக்கிறது என்று சொல்லி கட்டாயப்படுத்தி விடுதியில் தங்க வைத்துள்ளனர். இதுபோலவே வெவ்வேறு அறைகளில் தங்கியிருந்த மேலும் 7 மாணவிகளை தங்க வைத்துள்ளனர்.

சேர்மன் கருணாநிதியின் டிரைவர் துணையோடு, விடுதி வார்டன் பாமா காயத்ரியை சேர்மன் கெஸ்ட் ஹவுசிற்கு அழைத்துச்சென்றுள்ளனர். அங்கு ஸ்ரீநிதி மற்றும் அவரது 7 நண்பர்களோடு சேர்ந்து கொண்டு காயத்ரியை வலுக்கட்டாயமாக அடித்து துன்புறுத்தி சீரழித்துள்ளனர். தன்னைக்காப்பாற்றிக் கொள்ளும் போராட்டத்தில் பின்னந் தலையில் அடிபட்டு காயத்ரி அந்த இடத்திலேயே மரண மடைந்துள்ளார்.

**மரணமடைந்த காயத்ரியின் கழுத்தில் துப்பட்டாவைச் சுற்றிக் கொண்டுபோய் திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் ஓரமாக வீசிவிட்டு காயத்ரியின் பெற்றோருக்கு சொல்லாமல் உறவினரிடம் காயத்திரி தற்கொலை செய்து விட்டதாகவும், உடல் அரசு மருத்துவமனையில் கிடப்பதாகவும் தகவல் சொல்லியுள்ளனர்.** வழக்கை தற்சமயம் விசாரித்து வரும் காவல்துறை கல்லூரி நிர்வாகத்தின் பணவலைக்குள் சிக்கிக் கொண்டு தற்கொலை என்றே சாதிக்கிறது.

### மாணவி சாவில் சொல்லமுடியாத மர்மங்கள்

காயத்திரியின் மரணம் தற்கொலைதான் என்றால், காவல்துறைக்கு தகவல் சொல்லாதது ஏன்? காவல்துறை வருகிறவரை பிணத்தை அதே இடத்தில் வைத்திருக்காதது ஏன்?

கல்லூரி நிர்வாகம் கொடுத்த தகவலின் பேரில் அங்கு வந்ததாகச் சொல்லும் காவல்துறை ஆய்வாளர் ஈஸ்வரமூர்த்தி அதன்படி வழக்கு பதிவு செய்யாமல், ஏன் காயத்ரியின் அப்பா வெற்றிவேல் வரும்வரை காத்திருந்தார்?

தூக்குப்போட்டு தற்கொலை செய்திருந்தால், நாக்கு வெளியே தள்ளி கண்கள் மேலே போயிருக்குமே? அவ்வாறு அடையாளங்கள் இல்லாதது ஏன்? காயத்ரியின் உடலில் நகக்கீறல் களும், தொடையில் கன்றிப்போன காயங்களும், இருந்தது ஏன்? காயத்திரியின் உடல் வீசப்பட்டுக்கிடந்த இடத்தில் ரத்தம் தேங்கியி ருந்தது ஏன்? சுடிதார் பேண்ட் கிழிந்திருந்தது ஏன்? இந்த

2-ம் பக்கம் பார்க்க



கல்லூரி மாணவி காயத்ரி கொலைக்கு நீதிக்கேட்டு போராடிய அதியமான்- பொதுச் செயலாளர் நாகராசன் ஆகியோரை காவல்துறை கைது செய்து அழைத்து சென்ற காட்சி.



காயத்ரி படுகொலையை கண்டித்து சென்னையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் நிறுவனர் அதியமான் கண்டன உரையாற்றினார். இதில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன், பேரவை நிர்வாகிகள் மற்றும் கல்லூரி மாணவர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தலையங்கம்

# வன்கொடுமைக்கு வாளெடுப்போம்!!

ஏகலைவன் காலம் தொட்டே கல்வி மறுக்கப்பட்டு வந்த ஒடுக்கப்பட்ட மக்கள் இன்றளவும் கல்வி மறுக்கப்பட்டே வருகின்றனர். பொதுவாகவே உயர்கல்வி பெறுவோர் அளவு 11 விழுக்காடுதான் எனும்போது, ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி பெறுவோர் எவ்வளவு குறைவாக இருக்கும் என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இந்தத் தடைகளைத் தாண்டி ஒரு தலித் மாணவர் கல்லூரி வாசலை மிதிப்பதற்கு அவரைப் பெற்றவர்கள் எவ்வளவு பாடுபடுகிறார்கள் என்பதை உணர முடியும். அதுவும் முடை நாற்றமெடுத்துப்போன ஆணாதிக்க சமுதாயத்தில் ஒரு தலித் பெண் கல்வி பெறுவதென்றால் சொல்ல வேண்டியதே இல்லை. வர்க்கத்தால் ஏழையாக, பாலியலால் பெண்ணாக, சாதியால் சக்கிலிச்சியாக பிறந்த அன்புத் தங்கை காயத்ரி பள்ளிப்படிப்பைத் தாண்டி தொழில்நுட்பம் பயில நாமக்கல் திருச்செங்கோடு விவேகானந்தா கல்லூரி யில் இரண்டாம் ஆண்டு பி.டெக் வரை படிப்பதற்கு எத் துணை பாடுபட்டிருப்பார்? எத்துணை பேருடைய உழைப்பு பின்புலமாக இருந்திருக்கும்? அவரை வீட்டிலிருந்து 200 கி.மீ. தொலைவில் உள்ள திருச்செங்கோட்டில் உள்ள கல்லூரியில் சேர்த்து, வீட்டிலிருந்து போய்வர முடியாது என்று விடுதியில் தங்கி படித்து வைத்து எத்துணை பொருளாதாரச் சுமைகளையும் மனச்சுமைகளையும் தாங்கி வளர்த்திருப்பார்கள்? எவ்வளவு கனவுகளை அன்புத் தங்கை காயத்ரியும் அவர்தம் பெற்றோரும் கண்களிலே தேக்கி வைத்திருப்பார்கள்?

இவ்வளவு தடைகளைத் தாண்டி கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கிறபெண் இறந்து விட்டாள் என்று சுலபமாகச் சொல்லும் சேதி கேட்டு எப்படி துடித்துப் போயிருப்பார்கள்? பெற்றோர்கள். இறப்பும் இயற்கையாக இல்லாமல் கொலையாக இருக்கும்போது வேதனை எப்படிப் பெருகி இருக்கும்? இறப்புக்கு முன்பாக பாலியல் வன் முறைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறாள் என்கிற அடை யாளங் களைப்பார்க்கிற அவலத்துக்கு ஆளான அந்தத் தாயின் சோகத்தை யாரால் தாங்கிக்கொள்ள முடியும்? வாழையாக வாழ வேண்டிய இளம் குருத்தை அள்ளிக்கொடுத் திருக்கிற அபலைத்தாயின் கண்ணீருக்கு பதில் எங்கே?

பெண்களை வெறும் உடலாக மட்டுமே பார்க்கிற, ஒரு மனுஷியாகவோ, உயிராகவோ, ஒரு ஆளுமையாகவோ பார்க்கத் தவறுகிறகாமவெறியர்களின் பணக்கொழுப்புக்கு எம் தங்கை காயத்ரி போல எத்தனைபேர் விவேகானந்தா கல்லூரி வளாகத்தில் பலியாகி இருக்கிறார்கள்? மனிதத் தன்மையற்றஇந்த வன்செயல் நம் மனதை ரணமாக்கு கிறது என்றால், வன்செயலைக் கண்டு கள்ள மவுனம் சாதிக்கும் பொதுச்சமூகத்தின் புத்தி நம்மைக் கோபம் கொள்ளச்செய்கிறது. இறந்தவர் பெண்ணாக இருப்பதல் அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் போராடுகிறது. இறந்தவர் மாணவர் என்பதால் இந்திய மாணவர் சங்கம் போராடுகிறது. இறந்தவர் ஆதித்தமிழச்சி என்பதால் பேரவை களம் காணுகிறது. அன்புத்தங்கை காயத்ரி படுகொலைக்கு நீதி வேண்டுமென்று வெளியுலக வாழ்வின் சின்னச்சின்ன உரிமைகளையும் சின்னச்சின்ன வசதி கயையும் புறந்தள்ளி சேலம் மத்திய சிறையின் கதவுகளுக் குள்ளாக தங்களை அடைத்துக்கொண்டு பொதுச்செயலர் நாகராசன், மாவட்டச்செயலர் தமிழரசன், உள்ளிட்ட 9 போராளிகள் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

நம்மைமத்தவிர வேறு யாரும் ஏன் போராடவில்லை? யானை மிதித்துச் சாகடிக்கப்பட்டால் லட்சங்களை அள்ளித் தரும் ஒரு பெண்ணின் தலைமையிலான தமிழக அரசாங் கம் ஏன் காயத்ரிக்காக இரங்கவில்லை? ஆளுங்கட்சியின் சிறு தவறுகளைக் கூட தங்கள் வேலைத்திட்டமாக எடுத்துக் கொள்ளும் எதிர்க்கட்சிகள் ஏன் காயத்ரிக்காக வாதாட வில்லை? தமிழர் உரிமை, திராவிடர் உரிமை, இந்து உரிமை, இந்தியர் உரிமை, எனப்பேசும் யாரும் ஏன் காயத்ரியின் உரிமையைப் பேச மறுக்கிறார்கள்?

எல்லாவற்றையும் சாதியாகப்பார்க்கிறீர்கள் என்று பேரவை உள்ளிட்ட ஒடுக்கப்பட்ட மக்கள் இயக்கங்களைக் கேள்விக்குள்ளாக்கும் எல்லா "சனநாயகவாதிகளையும்" பார்த்துப் பணிவாகக் கேட்கிறோம். காயத்ரியை சாதியாக பார்த்தது யார்? ஆக, காயத்ரியின் படுகொலைக்குப் பின்னால் சாதியம் இருக்கிறது. காயத்திரி படுகொலை போன்றவன்கொடுமைகள் என்பது சிக்கலான சாதிய சமூகத்தின் வெளிப்பாடு, எனவேதான், சாதிய அமைப்பை தகர்க்காமல் வன்கொடுமைகளுக்கு முடிவு கட்ட முடியாது. சாதிய அமைப்பைத் தகர்க்க நமக்கு இருக்கும் ஒரே வழி அம்பேத்கர் காட்டிய வழிதான். நியாயமாக இவ்வளவு சிக்கல்களுக்குப் பிறகு வெறெந்த மக்கள் தொகுப்பாக இருந்தாலும் பிரிந்துபோகத்தான் முடிவெடுத்திருப்பார்கள். ஆனால், பட்டியலின மக்கள் இவ்வளவுக்குப் பிறகும் சேர்ந்து வாழவே விரும்புகிறார்கள். அப்படியானதொரு சேர்க்கைக்கு தடையாக இருக்கும் சாதியை ஒழிக்க விரும்புகிறார்கள்.

தனிப்பட்ட விவேகானந்தா கல்லூரி தாளாளர் கருணாநிதி மட்டுமே நம்முடைய எதிரி அல்ல, சாதியத்தைக் கட்டிக்காக்கும் இந்த சமூகக் கட்டமைப்பே எதிரியாகும், சாதிய அமைப்பு முறையை இல்லா தொழிக்கும் ஒரு நீண்ட நெடிய போரில் இடையறாது, சமரசமில்லாது போராடுவதே என்கொடுமைகளுக்கு எதிராக வாளெடுப்பது என்பதால், சாதிய அமைப்பு முறைக்கு எதிராக வாளெடுப்போம்! வாழ்க்கைக்கு போர் தொடுப்போம்!!




காயத்ரி படுகொலையை கண்டித்து சென்னையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் கண்டன உரையாற்றினார். உடன் பேரவை நிறுவனர் அதியமான்.

## காயத்ரி கொலை...

1-ம் பக்க தொடர்ச்சி..

*அடையாளங்கள் எல்லாம் முதல் தகவல் அறிக்கையிலோ, பிரேத விசாரணை அறிக்கை யிலோ, பிரேத பரிசோதனை அறிக்கையிலோ குறிக்கப் படாதது ஏன்?*

**தற்கொலைதான் என்றால், கல்லூரி நிர்வாகம் சார்பில் ஒருவர் கூட காயத்ரி யின் வீட்டுக்கு ஆறுதல் சொல்ல வராதது ஏன்? இவ்வாறு காயத்ரியின் பெற்றோர் கேள்வி எழுப்புகிறார்கள்.**


*யார் ஒருவர் இருந்தாலும் இறந்தவர் வீட்டுக்கு சென்று துக்கம் விசாரிப்பது தமிழக பண்பாடு ஆனால் காயத்ரி வீட்டுக்கு கல்லூரி நிர்வாகத்தின் சார்பில் ஒருவர் கூட துக்கம் விசாரிக்க வரவில்லை. இது போன்ற கேள்விகளோடு விசாரணையைத் தொடங்கினால் தான் காயத்ரி சாவுக்கு காரண மானவர்கள் சிக்குவார்கள்.*

*இச்சம்பவம் மாணவிகள் - பெற்றோர்கள் மத்தியில் பீதியை கிளப்பியுள்ளது. இதை இப்படியே விட்டுவிட்டால் விவேகானந்தா கல்லூரியில் படிக் கும் மாணவிகளின் வாழ்க்கை கேள்விக்குறியே! எனவே இந்த வழக்கை சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றி குற்றவாளிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டு என்றும், கைதான பேரவை தோழர்களை நிபந்தனையின்றி உடனே விடுதலை செய்ய வேண்டும். என்று ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் அதியமான் வேண்டு கோள்விடுத்தார்.*

### ஒரு வருடத்தில் மட்டும் 5 பேர் அருந்ததியர்கள் பலி

*கோவை மேட்டுப்பாளையத்தில் வன் கொடுமையால் வீராச்சாமி அடித்தே படுகொலை, சேலத்தில் கல்லூரி மாணவி ஜோதி தற்கொலை. விருதுநகர் சுரேஷ் காவல்துறையால் அடித்து படு கொலை, திருத்தங்கலில் பாண்டித்துரை ஆதிக்க சாதியால் வெட்டி படுகொலை, இப்போது மாணவி காயத்திரி படுகொலை செய்யப்பட்டுள்ளார். தமிழக அரசு இந்த மக்கள் மீது அக்கறை கொண்டு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*50 லட்சம் அருந்ததியர்களின் நிலை கேள்விக் குறியாக உள்ளது.*



## கல்லூரி நிர்வாகி மகன் சிறிநிதிக்கு பலியாகும் கல்லூரி மாணவிகள்

### கல்லூரி மாணவி கண்ணீர் பேட்டி


23 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவியர் படிக்கும் விவேகானந்தா கல்லூரியில் ஒவ்வொரு மாணவியும் இன்றளவும் கல்லூரி வளாகத்துக்குள் இருக்கும் ஸ்டூடி யோவில் மட்டுமே போட்டோ எடுத்துக்கொள்ளவேண்டும் என்கிற சூழ்நிலையை கல்லூரி நிர்வாகம் உருவாக்கி வைத்துள்ளது. அவ்வாறு எடுக்கிற ஒவ்வொரு மாணவியின் படமும் தாளாளர் கருணாநிதி வீட்டுக்கு கருணாநிதியின் மகன் ஸ்ரீநிதியின் பார்வைக்கு அனுப்பி வைக்கப்படு வதாக கூறுகிறார்கள்.

பல்லாயிரக்கணக்கான ஏழை-எளிய நடுத்தரக் குடும்பங்கள் கஷ்டப்பட்டு உழைத்துச் செலுத்தும் கல்லூரிக் கட்டணத்தில் கோடி, கோடியாகக் கொள்ளையடித்து கொழுக்கும் கல்லூரி முதல்வரின் மகன் ஸ்ரீநிதி தனக்கு அனுப்பி வைக்கப்படும் புகைப்படங்களில் பிடித்தமான மாணவிகளைத் தேர்ந்தெடுத்து சேர்மன் கெஸ்ட்ஹவுசிற்கு (ஹாஸ்டல்) விடுதி வார்டன் பாமா மூலம் வரவழைத்து தானும் தனது நண்பர்களும் கூட்டாகச் சேர்ந்துகொண்டு கற்பழிப்பதை வழக்கமாக கொண்டுள்ளனர். உடன்படாத மாணவிகளை படுகொலை செய்து, தற்கொலை செய்து கொண்டதாக விடுதி வார்டன் பாமா மூலம் செட்டப் செய்து, அரசு மருத்துவ மனையில் கொண்டு போய் போட்டு விட்டு பெற்றோர்களிடம், உனது மகள் தற்கொலை செய்து கொண்டாள், உடல் அரசு மருத்துவமனையில் கிடக்கிறது போய் எடுத்துக்கொள் என்று சொல்வார்கள் என்று அந்த கல்லூரியில் படிக்கிற பல மாணவிகள் தங்கள் பெயர்களை வெளியே சொல்லாமல் கண்ணீருடன் தெரிவிக்கின்றனர். இதுபோல் கல்லூரியில் படிக்கும் மாணவிகள் இன்னும் சிலர் இது மாதிரி கொலை செய்யப்பட்டிருக்கலாம் என பொதுமக்கள் அஞ்சுகின்றனர். இதனால் பெற்றோர்கள் பீதியடைந்துள்ளனர்.





காயத்ரி உருவபடத்திற்கு மாலை அணிவத்து அஞ்சலி செலுத்தும் பேரவை நிறுவனர் அதியமான். பொதுச்செயலாளர் நாகராசன், நிதிச்செயலர் நீலவேந்தன் அருகில் மகளை இழந்து வாடும் பெற்றோர்.



**அம்பேத்கர் பேசுகிறார்... சுதந்திரமானவன் யார்?** எவன் ஒருவன் தன் உரிமைகளை எப்போழுதும் தற்காத்து கொள்ளதயாராக இருக்கிறானோ, யார் ஒருவன் பொது விமர்சனத்திற்கு அச்சப்படாமல் இருக்கிறானோ, அடுத்தவன் கைப்பாவையாக மாறாமல் போதிய சிந்தனையும், சுயமரியாதையும் பெற்று இருக்கிறனோ அவனே சுதந்திரமான மனிதன்.

## தீண்டாமை ஒழிப்பு முன்னணி சார்பில் கோவில் நுழைவு போராட்டம் நடந்தது

மாமல்லபுரம்,செப்.19- தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் மாநிலக்குழுகூட்டம் மாமல்லபுரத்தில் கடந்த 18-ந்தேதி நடந்தது. இதில் பேரவை சார்பில் து.பொ.செ.நீலவேந்தன் கலந்து கொண்டனர். கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானம் வரும் செப்டம்பர் 30-ந்தேதி தியாகி பி.சீனிவாசராவ் நினைவுநாளில் தீண்டாமைக்கு எதிராக அனைத்து மாவட்டங்களிலும் காளப்பட்டி மாரியம்மன் கோவில் நுழைவு, திருப்பூர் பஞ்சமி நிலம் மீட்பு உள்ளிட்ட நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடுவது என்பது உள்ளிட்ட முக்கிய முடிவுகள் எடுக்கப் பட்டன.

## தூத்துக்குடியில் அணு உலையை இழுத்து மூடக்கோரி பேரணி: கொளத்தூர் மணி உள்பட பேரவையினர் 250 பேர் கைது

தூத்துக்குடி, செப்.19- அணு உலைக்கு எதிராக கடந்த 19ந்தேதி தூத்துக்குடியில் பேரணி நடந்தது. பேரணியில் கூடங்குளம் அணுஉலையை இழுத்து மூடு, இடிக்கரை மீனவர் அந்தோணிராஜ் உள்ளிட்டோரை கொன்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வலிறுயுத்தியும், கண்டன முழக்கங்கள் எழுப்பியும் பேரணி பனிமயமாதா ஆலயத்திலிருந்து இடிந்தகரை நோக்கி கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் தோழர் கொளத்தூர்மணி தலைமையில் தமிழக மக்கள் சனநாயக கட்சி தலைவர் கே.எம்.ஷெரீப், தியாகு, அரங்க குணசேகரன், பேரவை சார்பில் நீலவேந்தன் பேரணியாக புறப்பட்டனர். இதில் 250 மேற்பட்டடோர் கைது செய்யப் பட்டு விடுவிக்கப் பட்டனர். இதில் பேரவை மாவட்ட செயலர் சண்முக வேல், மாவட்ட துணைத்தலைவர் அருந்ததி அரசு, ஆட்டோ சரவணன், வெற்றிச்செல்வன், உள்ளிட்ட பேரவை தோழர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## லூர்துமேரி ஆலய உடைப்பை கண்டித்து பட்டினிப்போராட்டம்

அணு ஊலையை இழுத்து மூடு என போராடி வரும் மக்கள் மீதான அடக்குமுறையின் ஒரு பகுதியாக லூர்து மேரி ஆலயம் உடைப்பைக் கண்டித்து பாளை மறைமாவட்ட ஆயர் ஜூடு தலைமைமயில் பட்டினிப்போராட்டம் கடந்த செப்டம்பர் 15-ந்தேதி நடந்தது. இதில் பேரவை சார்பில் நீலவேந்தன் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். இதில் பேரவை மாவட்ட செயலர் கலைக்கண்ணன், மாவட்ட தலைவர் சுந்தர்ராசு, இளஞ்செழியன் உள்பட ஏராளமான பேரவை தோழர்கள் கலந்து கொண்டனர்.

## அருந்ததியருக்கு உள் இடஒதுக்கீடு பாதுகாப்பு கோரி பட்டினிப்போராட்டம்

சென்னை,செப்.8- மத்திய மாநில எஸ்.சி.ஏ, அரசு ஊழியர் கூட்டமைப்பு சார்பில் அருந்ததியர் உள் இட ஒதுக்கீட்டுக்கு பாதுகாப்புகோரி சென்னை வள்ளுவர் கோட்டம் எதிரே செப்டம்பர் 8ந்தேதியன்று பட்டினிப்போர் நடை பெற்றது. ஊழியர் கூட்டமைப்பின் தலைவர் முனி யன் தலைமை வகித்தார். பட்டினிப்போரை கூட்டமைப்பின் பொதுச்செயலர் முத்துசாமி தொடங்கி வைத்தார். இந்த போராட்டத்தில் ஆதித்தமிழர் பேரவை நிதிச் செயலாளர் நீலவேந்தன், மற்றும் அருந்ததியர் அமைப்பின் தலைவர்கள் வலசை ரவிசந்திரன், ஜக்கையன், நாகை திருவள்ளுவன், எஸ்.டி. கல்யாண சுந்தரம், தீ.ஒ.மு. சாமுவேல்ராஜ் உள்பட பலர் வாழ்த்தி பேசினர். பேரவை தோழர்கள் வீரமுருகு, அருந்ததி மைந்தன், கரூர்துரைஅமுதன் உள்ளிட்ட ஏராள மானோர் கலந்து கொண்டனர்.



## மாவீரன் இமானுவேல்சேகரன் நினைவிடத்தில் அதியமான் வீரவணக்கம்

பரமக்குடி,செப்.11- சாதி ஒழிப்புப் போராளி இம்மானுவேல்சேகரன் நினைவுநாளையொட்டி பேரவை நிறுவனர் அதியமான் அவரது நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். இதில் பொதுச்செயலாளர் நாகராசன்,நிதிச்செயலாளர் நீலவேந்தன், இளந்தமிழர் பேரவை செயலர் ஆனந்தன், உள்ளிட்ட ஏராளமான பேரவை தோழர்கள் கலந்து கொண்டனர்.



திருச்செங்கோட்டில் தீண்டாமை ஒழிப்பு முன்னணி சார்பில் காயத்ரி படுகொலைக்கு நீதிகேட்டு ஆர்ப்பர்ட்டம் நடந்தது.

### திருத்தங்கல் பாண்டித்துரை கொலை கண்டித்து ஆர்ப்பாட்டம்:

## யார் இறந்தாலும் பிணம் தூக்க செல்லமாட்டோம் அதியமான் முன் அருந்ததிய மக்கள் சபதம்

சிவகாசி செப்,13- திருத்தங்கல் நகரச் செயலாளர் சந்தானம் இவரது மகன் பாண்டித்துரையை ஆதிக்க சாதி வெறியர்களால் வெட்டி படுகொலை செய்யப்பட்டார்.

இதை கண்டித்து நிறுவனர் அதியமான் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் பேரவை நிறுவனர் அதியமான் கலந்துகொண்டு பேசுகையில் பாண்டித்துரை கொலை ஆள்மாறாட்டம் என்று பொய் சொல்கிறார்கள். இந்த கொலை ஆதிக்க சாதி செய்த சதி வேலை தான். அந்த இளைஞர் விழித்திருக்கையில் இச்சம்பம் நடந்திருந்தால் அவர்களை தாக்கி விட்டுதான் தன் உயிரை மாய் திருப்பான் அந்த இளைஞர். ஏனென்றால் வீரபரம்பரையில் வந்த கூட்டம் நாங்கள். திருத்தங்கலில் உள்ள அருந்ததிய மக்கள் ஒரு முடிவு எடுத்திருக்கிறார்கள் யார் இறந்தாலும் பிணம் தூக்கவோ, கருமாதி சொல்லவோ நாங்கள் செல்லமாட்டோம் என்று சபதம் ஏற்றுள்ளனர். இதை நான் வரவேற்கிறேன். இதேபோல் அனைத்து மாவட்டத்தில் உள்ள அருந்த தியர்கள் சபதம் ஏற்றால்தான் இந்த மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள இழிவு நிலை அகலும். இவ்வாறு பேசினார்.


போராட்டத்திற்கு விருதுநகர் மாவட்டச்செயலர் ஈஸ்வரன் தலைமை வகித்தார். பேரவை நிறுவனர் அதியமான் நிறைவுரையாற்றினார். பொதுச்செய லாளர் நாகராசன், துணைப்பொதுச் செயலாளர் நீலவேந்தன், கொள்கை பரப்பு செயலர் தீபா, அமைப்பு செயலாளர் விடு தலைவீரன், உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினார்கள். இதில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் கனியமுதன், தீண்டாமை ஒழிப்பு முன்னணி ஞானகுரு உள்ளிட்டோர் கலந்து கொண்டு கண்டன உரை யாற்றினார். முன்னதாக பாண்டித் துரை நினைவுக் கொடிக்கம்பத்தில் அதியமான் நீலசெங்கொடியேற்றினர்.



திருத்தங்கலில் பாண்டித்துரை படுகொலையை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட விடுதலைசிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுசெயலாளர் கனியமுதன் அதியமானுக்கு சால்வை அணிவித்து கவுரவித்தார் உடன் மாவட்ட நிர்வாகிகள்.



திருத்தங்கலில் பாண்டித்துரை படுகொலையை கண்டித்து கண்டன ஆர்ப்பர்டடம் நடைபெற்றது. இதில் அமைப்புச்செயலர் விடுதலைவீரன் கண்டன உரையாற்றினார். இதில் நிறுவனர் அதியமான், பொதுச்செயலாளர் நாகராசன், நிதிச்செயலர் செ.நீலவேந்தன், கொ.ப.செயலர் தீபா, மாவட்டசெயலாளர் பூவை ஈஸ்வரன் மற்றும் நகர, ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



**பெரியார் ...** "தமது கருத்தும் கொள்கையும் அடிப்படையான சமுதாய சீர்திருத்தத்துக்கு வழிகோலும் என்னும் நம்பிக்கையுடன் நாடெங்கும் பட்டி தொட்டியெல்லாம் அதைப்பரப்புவதே தமது தொழில் என்றார், கல்லடியும், சொல்லடியும், கலவரமும், கடும் தாக்குதலும் நிகழ்ந்தபோதும்- சோர்வடையாமலும், இலட்சியத்தைக் கைவிடாமலும் 'மக்களுக்காகத்தான் நாம் வாழ்கிறோம்' இழிவுக்கும் பழிக்கும் ஆளான தாழ்ந்த நிலை பெற்றமக்களுக்கு வாழ்வளிப்பதை விட நமக்கென்ன வேறு வாழ்வு என்ற எண்ணத்துடன்-தியாகத்திரு நாள்களாக'த் தமது வாழ்க்கைப் பாதையை அமைத்துக்கொண்டார்.

## நாமக்கல்- விவேகானந்தா கல்லூரியில் படித்தமாணவி காயத்ரி கொலை:

# கொதித்தெழுந்த ஆதித்தமிழர்கள்; மிரண்டுபோன காவல்துறை





கூட்டத்தை கண்டு மிரண்டுபோன காவல்துறை



மாணவி கொலைக்கு நீதிகேட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் திரண்ட ஆதித்தமிழர்கள்



டி.எஸ்.பி.யிடம் அதியமான் வாக்குவாதம்



இதென்ன? ரயில் தண்டவாளத்தில் கூட தலைவைக்கை தயங்கமாட்டோம் ...



இனியும் நாங்கள் பொறுமை காக்கமாட்டோம் என வெகுண்டெழுந்த ஆதித்தமிழர்கள்



சோகத்தில் உறைந்துபோன காயத்ரியின் தாய்

# மாணவி காயத்ரி கொலை மற்றும் பொதுச்செயலாளர் நாகராசன் கைது கண்டித்து தமிழகம் முழுவதும் ஆதித்தமிழர்பேரவை நடத்திய கண்டன ஆர்ப்பாட்டங்களில் சில...



விருதுநகர்


சென்னை



ராமநாதபுரம்




ஈரோடு


மதுரை


சங்கரன்கோவில்



கரூர்


தேனி

## நகப்பாளையத்தில் ஆதிக்க சாதி பணிந்தது: ஆதித்தமிழர் பேரவை போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி

ஈரோடு வட்டம், கொடுமுடி உள்வட்டம், நகப்பாளையம் பகுதியில், தீண்டாமை சுவர் இடிக்கப்பட்டதை தொடர்ந்து அருந்ததிய மக்கள் வசிக்கும் பகுதியில்

கடந்த 7.7.2012 அன்று சவ ஊர்வலம் வழக்கமாக செல்லும் பாதையில் செல்லாமல் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்குடியிருப்பு பகுதி வழியாக கொண்டு சென்றதையடுத்து இரு தரப்பினருக்கும் மோதல்கள் இருந்து வந்தது. இதை கண்டித்து ஆதித்தமிழர் பேரவை சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டன. இதன் பயனாக காவல்துறை இருதரப்பினரை அழைத்து இந்த பிரச் சனைக்கு சுமூக முடிவுக்கு கொண்டுவர இருதரப்பினர் அடங்கிய அமைதி பேச்சுவார்தை கூட்டம் ஈரோடு வருவாய் கோட்ட அலுவலகத்தில் கோட்ட அலுவலர் தலைமையில் பெருந்துறைகாவல் துணை கண்காணிப் பாளர் முன்னிலையில் நடத்தப்பட்டது. இதில் முக்கிய முடிவு எடுக்கப்பட்டது. அவை வழக்கமாக கொண்டு செல்லும் பாதையிலேயே சவ ஊர்வலம் கொண்டு செல்வது என்றும், தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் குடியிருப்பு பகுதி வழியாக செல்வதில்லை எனவும், இருதரப்பினரி டையே நல்லுறவு ஏற்படவேண்டும் என முடிவு எடுக்கப்பட்டது. அந்த பாதையில் இருக்கக்கூடிய ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. முடிவில் இருதரப்பினரும் காவல்துறைவழங்கிய படிவத்தில் கையொப்பமிட்டனர்.



பகுதி-3

# வரலாற்றில் மறைக்கப்பட்ட மாமன்னர் ஒண்டிவீரன் வரலாறு...

அடுத்துவந்த கவர்னர் ஜெனரல் கானிங்பிரபு "பொது சேவைக்கான படையில் சேரும் சட்டம்" என்ற சட்டத்தின் மூலம் வங்காளப்படைப்பிரிவில் உள்ளவர்களை இந்தியாவிற்குள்ளும், இந்தியாவிற்கு வெளியே அயலகத்திலும் போரிட உத்திரவிட்டார். வங்காள் படைப்பிரிவில் அயோத்தியிலும், வடமேற்கு மாகாணத்திலும் உள்ள "உயர்சாதி" யைச் சார்ந்தவர்களே வீரர்களாக இருந்தனர், இவர்களின் சாதிய சமய அந்தஸ்து,

நில உடமையாளர்களே அன்றைய நிலமானியக் கட்டமைப்புச் சமுதாயத்தில் ஆட்சியாளர்கள் என்பதற்கு கடந்தகால வரலாறுகள் சான்றாக இருக்கின்றன. இதனால் நெற்கட்டும் செவ்வயல் பாளையத்தில் உரிமையாளர்களாக ஜமீன்களாக அருந்ததியர்களே இருந்துள்ளார்கள் என்பது வெளிப்படையாகிறது.

இங்கே இன்னொரு செய்தியையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. 1700 ஆண்டுகளில் மத்தியப் பகுதியில் நெற்கட்டும் செவ்வயல் பாளையத்தின் தலைவராக பூலித்தேவரே பொறுப்பேற்று விடுதலைப் போரில் கலந்து கொண்டதாக ஆவணங்கள் கூறகின்றன.

எப்பொழுது? எப்படி இவர் இந்தப் பாளையத்திற்கு தலைவர் ஆனார்? அல்லது தலைமை தாங்கினார்? என்பதற்கான சான்றுகளோ அல்லது ஆவணங்களே கிடைக்கவில்லை. அந்தப்பகுதி மக்களின் வாய்வழிச் செய்தியாக கதை ஒன்று இருக்கிறது.

இராமநாதபுரத்தைச் சேர்ந்த புலித்தேவரின் முன்னோர், நற்கட்டும் செவ்வயல் அருந்ததியர் ஜமீனில் கூலிவேலை செய்து கொண்டு இருக்கும்போது ஒரு பெண்ணுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்ததாகவும்; வாரிசு இல்லாத அருந்ததியர் ஜமீன் அந்தக் குழந்தைகளைத் தத்தெடுத்து அரண்மனையில் வளர்த்ததாகவும், அவர்களில் ஒருவர் மகன்தான் பூலித்தேவர் என்றும் செவிவழிக் கதையாக சொல்லப்படுகிறது.

இதன்படி பூலித்தேவரின் தந்தை தன் உடன் பிறந்த சகோதரனுடன் தத்தெடுக்கப் பட்டார்கள் என்று பொருள்படுகிறது. பூலித் தேவரின் தந்தை சித்திரபுத்திர தேவன் இவ்வாறு வாரிசு முறையில் தத்தெடுக்கப்பட்டார் என்பது உண்மையானால் அதற்குரிய ஆவணங்கள், வரலாற்றில் அவரின் பதிவுகள் ஏன் இல்லாமல் போயின என்று கேள்வியும் இங்கே எழுகிறது. இதற்குரிய விடை இல்லாமல் போவதால் இந்தக் கதையும் புனைந்து சொல்லப்பட்ட கதைதான் வேறில்லை.

தமிழ்நாடு அரசின் கீழ்திசை நூலகச் சுவடிகள் நூல்நிலைய ஓலைச்சுவடிகளில் இருந்து பதிப்பித்த பாளையப் பாட்டுகளின் வரலாற்றுத் தொகுதி ஒன்றில் பூலித்தேவரின் முன்னோர்களான வரகுணராம சிந்தாமணி பாண்டியன் தொடக்கம் சமசதிதேவன், காத்தப்பதேவன், காத்தபுலிக்கதேவன், சித்திரபுத்திர தேவன், காத்தப்பபுலித்தேவன், சித்திரபுத்திர தேவன் ஆகிய 7 தலைமுறையினர் 213 ஆண்டுகள் நெற்கட்டும் செவ்வயலை ஆட்சி செய்ததாகவும், இறுதியாக பூலித்தேவர் ஆண்டதாகவும் கூறுகிறது.

இந்தச் செய்தி வரலாற்று காலக் கணக்கீட்டில் முரண்டபட்டதாக உள்ளது.

பூலித்தேவன் பிறந்தது 1774 ஆம் ஆண்டு, அதற்கு முன்னர் 213 ஆண்டுகள் இவரின் முன்னோர் ஆண்டனர் என்றால் அவர்களின் ஆட்சிக் தொடக்கம் 1501 ஆம் ஆண்டில் இருந்து தொடங்குகிறது. தென் தமிழ்நாட்டைப் பாளையங்களாக பிரித்தவர் தளவாய் அரியநாத முதலியார், விஸ்வநாத நாயக்கன் காலத்தில், இந்தக் காலம் 1529 இல் இருந்து தொடங்குகிறது. இதிலிருந்து, பாளையங்களாக பிரிக்கப்படாத 28 ஆண்டுகளுக்கு முன்னரே 1501 இல் நெற்கட்டும் செவ்வயல் பாளையமாக இருந்தது என்று சொல்வது வரலாற்றுக்கு முரண்பாடானது. அந்த காலகட்டத்தில் ஜமீன் முறையும் அறிமுகமாகவில்லை. ஆகவே மேற்கண்ட 213 ஆண்டுகாலம் பூலித்தேவன் முன்னோர்கள் ஆட்சி என்பது ஒரு கற்பனைச் செய்தியாகவே இருக்கிறது.

இருந்தபோதிலும் பூலித்தேவர் நெற்கட்டும் செவ்வயல் பாளையத்தின் தலைமையில் இருந்துள்ளார் என்பதை மறுப்பதற்கு இல்லை.

பூலித்தேவரின் முன்னோர் பாளையத்தை ஆண்டதற்கான எந்த ஒரு சான்றும் இல்லாத காரணத்தால், நெற்கட்டும் செவ்வயல் பாளையத்தை அவர் காலத்தில், அவரே கைப்பற்றி இருக்கவேண்டும்.

ஆனால் நெற்கட்டும் செவ்வயலை அவர் எப்படிக் கைப்பற்றினார்? யார் துணை செய் தார்கள்? அப்போது அங்கு ஆண்டு கொண்டிருந்தவர்கள் பகடை இனத்தைச் சேர்ந்தவர்கள், அருந்ததியர் என்று சொல்லியிருந்ததை முன்னர் சுட்டிக் காட்டப்பட்டது. அதைத் தொடர்ந்து பூலித்தேவரின் முன்னோர்கள் அருந்ததியர் ஜமீனிடம் வேலை செய்திருக்கிறார்கள் என்பதையும் அவர் விவரித்திருந்தார்.

இவர் சொல்வதைப்போலவே இன்றும் அந்தப் பகுதி மக்கள் எந்தச் சாதியாக இருந்தா லும், அனைவரும் ஒருமுகமாக நெற்கட்டும் செவ்வயல் அருந்ததியர் ஜமீன் என்றும், அதை ஆட்சி செய்துவந்தவர்கள் அருந்ததியர்கள்தான் என்பதையும் அழுத்தமாகவே சொல்லி வருகிறார்கள்.

இந்தச் செய்தி இன்று வியப்பாக இருந்தாலும் அதுதான் உண்மை. எப்படி?

தொடரும்...

அருந்ததியர் பெண்ணுக்கும்-இசுலாமிய இளைஞருக்கும் திருமணம்:

## மணப்பெண் சுதா இந்துத்துவ என்ற கொடுமையான நோயிலிருந்து விடுதலை பெற்றுள்ளார்

### சிவகங்கை மாவட்டத்தலைவர் ஏ.கே.பிச்சை இல்லத்திருமண விழாவில் அதியமான் பேச்சு

காரைக்குடி,செப்.12- சிவகங்கை பேரவையின் மாவட்ட தலைவர் ஏ.கே. பிச்சையின் மகள் திருமண விழா கடந்த செப்.12 ந்தேதி நடந்தது. இதில் பேரவை நிறுவனர் அதியமான் கலந்து கொண்டு பேசியதாவது:-

இசுலாமியருக்கும் அருந்ததியருக்கும் உள்ள உறவு என்பது சாதாரணமானது அல்ல. பாட்டன் முப்பாட்டான் காலத்திலேயே இந்த உறவு இருந்து வந்தது. எப்படி என்றால் மதுரைவீரனுக்கு போர் பயிற்சிகள் கற்று கொடுத்ததே ஒரு இசுலாமியர் சுல்தான்பாய் இது வரலாறு உண்மை. நம் மக்கள் வரலாறை படிக்க வேண்டும். இந்த மணப்பெண் சுதா இந்து என்ற கொடிய நோயிலிருந்து விடுதலை பெற்றுள்ளார். இத்திருமணம் இரு சமூக மக்களுக்கு உள்ள உறவை வலுப்படுத்தி இருக்கிறது. நாம் நெருங்கி வருகிற காலம் வெகு தூரம் இல்லை. இவ்வாறு பேசினார்.

விழாவில் தமிழக மக்கள் ஜனநாயக கட்சியின் தலைவர் கே.எம்.ஷெரீப், பேரவை நிதிச்செயலாளர் நீலவேந்தன், கொள்கைபரப்பு செயலாளர் தீபா, இளந்தமிழர் பேரவை செயலர் ஆனந்தன் மற்றும் நகர, ஒன்றிய நிர்வாகிகள் தோழர்கள் கலந்து கொண்டனர்.



சிவகங்கையில் பேரவையின் மாவட்ட தலைவர் ஏ.கே. பிச்சையின் மகள் திருமணங்கை விழாவில் மணமக்களுக்கு அதியமான் சாவித்திரி பூலே புத்தகத்தை பரிசாக வழங்கினார். உடன் தமிழக மக்கள் ஜனநாயக கட்சியின் தலைவர் கே.எம்.செரீப்

## திரைப்பட இயக்குனர் பாராட்டுவிழாவில் துணைப்பொதுச்செயலாளர் நீலவேந்தன்

திருப்பூர்,அக்.21 - திருப்பூர் கல்வி மேம்பாட்டுக் கூட்டமைப்பு சார்பில் அக்டோபர் 21-ம் நாளன்று திருப்பூரில் சாட்டை திரைப்பட இயக்குனருக்கு பாராட்டு விழா நடந்தது. பிரின்ஸ் கஜேந்திரபாபு, கலைவாணன், சியாம் சுந்தர், சாட்டை திரைப்பட இயக்குனர் அன்பழகன், ஆதித்தமிழர் பேரவை சார்பில் துணைப் நிதிச்செயலர் நீலவேந்தன், பாரதிவாசன், சிவகாமி உள்ளிட்ட பலர் பங்கேற்றுப் பேசினர். ஆசிரியர் மூர்த்தி விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.



காலமான திண்டுக்கல் மாவட்ட பொருளாளர் நாகராசனின் தந்தைக்கு பேரவையின் பொதுச்செயலாளர் நாகராசன் மலர் வளையம் வைத்து வீரவணக்கம் செலுத்தினார். உடன் அமைப்பு செயலர் விடுதலைவீரன்.



எஸ்.சி.(ஏ) கூட்டமைப்பு சென்னையில் நடந்த உள் இடஒதுக்கீடு பாதுகாப்பு கோரிய போராட்டத்திற்கு வருகை தந்த தலைவர்கள். வலசை ரவிச்சந்திரன், எஸ்.டி.கல்யாணசுந்தரம், ஜக்கையன் மற்றும் பேரவையின் வீரமுருகு, கலைக்கண்ணன்

# ஆலய நுழைவு போராட்டம் அம்மன் அருள்வேண்டி அல்ல...கோயிலிலும் சமத்துவம் வேண்டி...



கோவை காளப்பட்டி மாரியம்மன் கோவில் நுழைவு போராட்டத்திற்கு செல்லும் ஆதித்தமிழர் பேரவை அதியமான், பொதுச்செயலர் நாகராசன், கோவை எம்.பி. பி.ஆர்.நடராசன், மற்றும் தீண்டாமை ஒழிப்பு முன்னணி சம்பத், யு.கே.சிவஞானம், ஜனநாயக மாதர் சங்க தலைவி அமிர்தம் மற்றும் பலர்



கோவில் முன்பு செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கும் சம்பத், அதியமான்




கோவையில் செப்டம்பர் 17-ந்தேதி பெரியார் பிறந்தநாளன்று பேரவை நிறுவனர் அதியமான், பெரியார்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் பொதுச்செயலர் நாகராசன் மற்றும் நிர்வாகிகள்.

## கடலூரில் அம்பேத்கர் கல்வி வேலைவாய்ப்பு 19 -வது பயிற்சி மையம் துவக்கம்

கடலூர் செப்.21- கடலூரில் டாக்டர் அம்பேத்கர் கல்வி வேலைவாய்ப்பு பயிற்சி மையத்தின் 19-வது மையம் கடந்த 21-ம் தேதியன்று கடலூரில் தொடங்கி வைக்கப்பட்டது.

இதில் தென்மண்டல இன்சூரன்சு ஊழியர் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் க.சுவாமிநாதன், பேரவை சார்பில் நீலவேந்தன், கடலூர் மாவட்ட சி.ஐ.டி.யூ துணைச்செயலாளர் ரமேஷ்பாபு, கடலூர் மாவட்ட தீண்டாமை ஒழிப்பு முன்னணி செயலர் வாஞ்சிநாதன் உள்பட ஏராளமான தோழார்கள் கலந்து கொண்டனர்.


## புதுச்சேரியில் வாழும் அருந்ததியருக்கு உள்இடஒதுக்கீடு வழங்க கோரி

### ஆதித்தமிழர் பேரவை அமைச்சரிடம் கோரிக்கை மனு

புதுச்சேரி,செப்.21- தமிழகத்தைப்போல் புதுச்சேரியில் வாழும் அருந்ததியர்களின் மக்கள் தொகைக்கு ஏற்றாற்போல் உள்இட ஒதுக்கீடு வழங்கவேண்டும் என்று ஆதித்தமிழர் பேரவை சார்பில் அமைச்சர் ராஜவேலுவிடம் நிதிச்செயலர் நீல வேந்தன் கோரிக்கை மனுவை வழங்கினார்.

இதுகுறித்து அமைச்சர் ராஜவேலு கூறியதாவது:- முதலமைச்சருடன் கலந்துபேசி சட்டமன்றத்தில் விவாதித்து உள்இடஒதுக்கீடு வழங்க ஆவன செய்வதாக அமைச்சர் உறுதியளித்தார். உடன் புதுச்சேரி பொறுப்பாளர் விஜயகுமார், மற்றும் கடலூர் மாவட்ட செயலாளர் பக்கிரி மற்றும் கலந்து கொண்டனர்.

## பஞ்சமன் எங்கிருந்து வந்தான்? பெரியாரிடம் கேட்ட அன்பர்



பிரம்மனோட வாயில் இருந்து பிறந்தவன் பிராமணன்,

நெஞ்சில் இருந்து பிறந்தவன் சத்திரியன் (அரசர்கள்) வயிற்றில் இருந்து பிறந்தவன் வைஷ்யன்

காலில் இருந்து பிறந்தவன் சூத்திரன்றானுங்களே,

இந்த பஞ்சமன் எங்கிருந்து பிறந்தான்னு கேட்டாராம்

அதற்கு பெரியார் அதுவாய்யா, அவன் ஒருத்தன்தான் அம்மா-அப்பாவுக்கு முறையாக பிறக்கவேண்டிய இடத்தில் பிறந்தான் என்று பதில் அளித்தார்.




திருச்செந்தூரில் செப்.17தேதியன்று அணுஉலைக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட செயலர் சண்முகவேல் தலைமையில் நடந்தது. இதில் விடுதலைசிறுத்தைகள் கட்சியின் துணைப்பொதுசெயலர் கனியமுதன் கண்டன உரையாற்றினார். உடன் மாவட்ட நிர்வாகிகள்.



கேரளா அட்டப்பாடியில் அணை கட்டுவதற்கு எதிராக நடந்த போராட்டத்தில் கலந்து கொண்ட பேரவை நிறுவனர் அதியமான். பொங்கலூர் பழனிச்சாமி, சுசி.கலையரசன்,

# அதிமுகாவின் ஒரு ஆண்டு சா(சோ)தனைகள்...


## காவல்துறை செய்த அட்டகாசங்கள்



**இது கார்கில் போர் என்று நினைக்கவேண்டாம்?**
கூடங்குளம் அணுஉலை போராட்டத்தில் அராஜகம் புரியும் போலீஸ்.

## நெல்லையில் இசுலாமியர்கள்மீது காவல்துறை நடத்திய தடியடி காட்சிகள்







## நாமக்கல்: மாணவி கொலைக்கு நீதிகேட்டு போராடிய அருந்ததியர்கள் மீது காவல்துறை தாக்குதல்









போலீசார் நடத்திய தடியடியால் பெண்கள் கீழேவிழுவதும், முதியவர் ஒருவரை குண்டுகட்டாக தூக்கிசெல்லும் காட்சி. இளைஞர் ஒருவரை இழுத்து செல்லும் காட்சி.

**வாழ்நாள் நன்கொடை வழங்கியவர்கள்**

| | | |
|---|---|---|
| காக்கிசின்னன் | - | மதுரை |
| என்.வி.முருகன் | - | மனப்பாறை |
| நீலவேந்தன் | - | துணைஆசிரியர் |
| வே.ஆறுமுகம் | - | ஈரோடு |
| ஜான்பாக்யராஜ் | - | தூத்துக்குடி |
| ஆதித்தன் | - | சேலம் |





கடந்த ஆண்டு தியாகி இமானுவேல்சேகரன் நினைவு நாளில் பரமக்குடியில் நடந்த துப்பாக்கிசூட்டில் காவல்துறையினர் ஒருவரை தூக்கியும், மற்றொரு இளைஞரை இழுத்து செல்லும் காட்சி.

**ஆதித்தமிழன் நன்கொடை விபரம்**

ஆண்டு நன்கொடை - 100
வாழ்நாள் நன்கொடை - 1000
தனி இதழ் ரூபாய் - 10

தொடர்புக்கு:
**94430 63962**


**ஆசிரியர் குழு**

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | இரா.அதியமான் |
| துணைஆசிரியர் | : | நீலவேந்தன் |
| தட்டச்சு மற்றும் வடிவமைப்பு | : | கலை |

Printed: Publisher and and Editor R.athiyamaan, No.713, mettupalayam salai, R.S.Puram, Coimbatore-2. Mobile: 94430 84642.
kavi Achagam, No.713, mettupalayam salai, R.S.Puram, Coimbatore-2

மின் அஞ்சல் தொடர்புக்கு : adhiyamaanperavai@gmail.com பேரவை செய்திகளை பார்க்க வலைதளம் :www.aathithamizharperavai.com